சிறைக் கைதிகளுக்கு ஊதியம்.

*632 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயிலில் வேலை செய்யும் கைதிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்கான திட்டம் தமிழ்நாடு அரசின பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தற்பொழுது திறந்த வெளிச் சிறைகளில் வேலை செய்யும் கைதிகள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 25 காசுகள் ஊதியம் கொடுக்கப்படுகிறது. சிறைச்சாலைகளிலேயே வேலை செய்யும் கைதிகள் ஊதியம் ஈட்டிடும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state when this scheme would be implemented for other prisoners who are being taken outside Central Jail for work in the Transport Department and other departments?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதைக்கு அதை அமல் நடத்துவதாக இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, இப்பொழுது இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் கைதிகளுக்குத் தேவையானவற்றைச் சிறையிலேயே வாங்கிக்கொள்ள அரசு ஏற்பாடு செய்ய முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே தேவையானவற்றை அவர்கள் வாங்கிக்கொள்ள வசதியிருக்கிறது. கூலி கொடுத்துத்தான் செய்ய வேண்டும் என்பதில்லை.

திரு. பி. வேலுசாமி: தலைவர் அவர்களே, கைதிகளில் திருந்தினவர்கள், திருந்தப்படாதவர்கள் என்று இருப்பவர்களைத் தனித்தனியாக வைத்து திருந்தினவர்களுக்குச் சலுகை கொடுக்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விதிமுறைகளின்படி, நல்லவர்கள் என்று திருந்தியவர்களுக்கு மார்க்குகள் கொடுக்கிறார்கள். அடையாளச் சின்னங்களும் கொடுக்கிறார்கள். எந்த எந்த வசதிகளைச் செய்ய முடியுமோ, அவற்றைச் செய்து, விடுதலை செய்வதில்கூட நல்லவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படுகிறது.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கைதிகளில் திருந்தியவர்கள், ஜன்ம தண்டனை அடைந்தவர்கள், 10 12 ஆண்டுகளானால், அவர்களை விடுதலை செய்ய உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 9, 10 ஆண்டு கழித்தால், அங்கேயிருக்கும் அட்வைசரி போர்டு சிபாரிசு செய்தால், அரசாங்கம் அப்படிப்பட்டவர்களை விடுதலை செய்கிறார்கள்.

கடையனோடைக் கிராமத்துக்குப் பேருந்துப் பணி.

*633 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தென் திருப்பேறை கிராமத்திலிருந்து நாங்குநேரிக்குச் செல்லும் தனியார் பேருந்தை கடயனோடை கிராமம் வரைக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தெந்திருப்பேறை என்ற கிராமத்தில் இரவில் போகும் பஸ்கள் கடயனோடைப் பகுதி மக்கள் போக முடியாத நிலையில் இருப்பதால், இனிமேலாவது இதை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடிக்குத் தெரிவித்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடயனோடைக்கு பஸ்ஸை நீட்டுவதுபற்றி ஆர். டி. ஓ. வைக் கேட்டதில், ஒரு பஸ்ஸுக்கே பயணிகள் வருவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு பரிசீலிக்கப்படுவதற்கில்லை.

* 634 வினா—**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், ஆழ்வார் திருநகரியிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் தனியார் பேருந்தை தெந்திருப்பேறை, ஆறுமுகநேரி மார்க்கமாக கடையனோடைப் பகுதி வரைக்கும் நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தாலுகாவில் ஆறுமுகனேரி டவுனில் ஏராளமான ஜனத்தொகை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இந்தக் கடயனோடை இருக்கிறது. ஆகவே, அரசு ஆறுமுகநேரிக்கும், கடயனோடைக்கும் பஸ் போக்குவரத்தை விஸ்தரிக்க ஆர். டி. ஓ. வைக் கேட்டதற்கு அவருடைய பதில் என்ன

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே சொல்லியதுபோல

Even the one bus which is now serving adayanodai is found to be lacking in traffic potentialities.

எனவே, போதுமான பயணிகள் இல்லாததால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

அரசுப் பேருந்து பயணச் சீட்டுகள்

*635 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. கே. போஜன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு அரசு பஸ் போக்குவரத்துக்குத் தேவைப்படும் டிக்கெட்டுகளை நமது மாநில அரசின் அச்சகத்தில் அச்சிடாமல் வெளி மாநில அரசின் அச்சகத்தில் அச்சடிப்பது உண்மையா?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுகளில் ஒரு பகுதி, டில்லிப் போக்குவரத்து நிறுவனத்தால் அச்சிடப்பட்டுப் பெறப்படுகின்றது.

(இ) அரசு அச்சகத்தில் வேலைச்சுமை அதிகரித்துள்ளதன் காரணமாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுக்களை அரசு அச்சகம் உரிய காலத்தில் அச்சிட இயலவில்லை.